# இந்தியா

## இந்திய கடற்படைக்கு 2 போர்கப்பல்கள் வாங்க ஒப்பந்தம்:

- இந்தியா 2 போர்க்கப்பல்களை வாங்க ரஷியாவுடன் ரூ.3572 கோடி ஒப்பந்தம் செய்துள்ளது.
- ரஷ்யா 2023 இந்த கப்பல்களை இந்தியாவுக்கு வழங்கமுடிவு.
- ரஷ்யாவின் ரோசோ போரான் நிறுவனம் இந்தியாவின் கோவா கப்பல் கட்டும் நிறுவனமும் இணைந்து செயல்பட உள்ளன.
- ஏற்கனவே இந்தியா ரஷ்யாவுடன் 5400 ரக ஏவுகணை வாங்க ஒப்பந்தம் செய்துள்ளது.

## பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா:

- பொருளாதாரத்தில் பின் தங்கியவர்களுக்கு வீடுகள் கட்டித்தரும் திட்டம் ஆகும். தற்போது HDFC வங்கி இத்திட்டத்திற்கு 1100 கோடி வீட்டுகடன் மானியம் வழங்கி உள்ளது.
- இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது - June 2015.
- இதன் மூலம் 2022க்குள் அனைவருக்கும் வீடு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## பான்கார்டில் தந்தை பெயர் கட்டாயமில்லை:

- பான்கார்டில் தந்தை பெயர் கட்டாயமில்லை என வருமான வரித்துறை அறிவித்துள்ளது, தாயார் மட்டும் உள்ளவர்கள் தந்தை பெயர் சேர்த்துக் கொள்வதில் சிக்கலை தீர்க்க மாற்றங்கள் கொண்டு வந்துள்ளது. நேரடி வரிகள் ஆணையம்.
- இந்த புதிய விதிகள் டிசம்பர் 5 தேதி முதல் நடைமுறைக்கு வர உள்ளது.

## மிஸ் ஐரோப்பா - ஆசியா 2018 அழகிப்போட்டி:

- இது கேட்கும் சக்தி இல்லாதவர்களுக்கான அழகி போட்டி ஆகும். இதில் நிஷ்தா துடேஜா வெற்றிபெற்றார், இவர் ஹரியானாவை சேர்ந்தவர்.
- இந்தபோட்டி செக்குடியரசில் நடந்தது.
- இவர் மாற்றுத்திறனாளிகளுக்கு தேவை சமவாய்ப்புதான் என்பதை வெளிப்படுத்தினார்.

## குளோபல் ஆணிவல் டேலண்ட் ரேங்:

- இந்தப்பட்டியலில் இந்தியா 53வது இடத்தை பெற்றது.
- இதை வெளியிடுவது ஐ.எம்.டி பிசினஸ் School என்ற நிறுவனம் வெளியிடுகிறது (ஸ்விட்சர்லாந்து).
- முதலிடம் ஸ்விட்சர்லாந்து.

## 49வாது இன்டர்நேஷனல் பிலிம் பெஸ்டிவல் (IFFI):

- இது கோவா-பனாஜியில் நடந்தது.
- இது சிறப்பு tribute மகாத்மா காந்திக்கு அர்ப்பணிக்கப்பட்டது.

## வஜ்ரா பிரகார் கூட்டு ராணுவ பயிற்சி:

- இந்தியா - அமெரிக்கா இடையே, இந்தியாவிலுள்ள பிர்கானிரில் நடந்தது.

## இமயமலை பகுதி பிராந்திய ஆணையம்:

- இமயமலை பகுதியின் நீடித்த வளர்ச்சியை உறுதி செய்யும் பொருட்டு இந்த ஆணையம் உருவாக்கப்பட்டுள்ளது.
- இதற்கு தலைமை - வி.கே. சரஸ்வத்.
- இதில் 12 மாநிலங்களை உள்ளடக்கியது.

### இந்திய சமூகப்பணி மாநாடு:

- இது 6வது பதிப்பு ஆகும், புது டெல்லியில் நடந்தது.
- சமூக அளவில் சகோதரத்துவத்தை கொண்டு வருவதை நோக்கமாக கொண்டு இம்மாநாடு நடந்தது.

## சர்வதேச நிகழ்வுகள்

### ஷியான் -6:

- இது ஒரு செயற்கைகோள் ஆகும், இதை சீனா விண்ணில் செலுத்தியது (இது விண்வெளி சுற்றுச்சூழல் ஆய்வுகளை மேற்கொள்வதற்கு).
- ஒரே ராக்கெட் மூலம் 5 செயற்கை கோள்களை சீனா செலுத்தியது.

### ஆப்பிரிக்கா கண்டத்தின் முதலாவது அதிவேக ரயில் பாதை:

- இந்த இரயில் பாதையானது டேன்ஜியரில் இம்மானுவேல் மேக்ரான் (பிரான்ஸ் அதிபர்) தொடங்கி வைத்தார்.
- இந்த ரயில்பாதைக்கு "அல் போராக்" எனப் பெயர் இட்டுள்ளது, இது டேன்ஜியர்-கஸா பிளான்கா ஆகிய இரு நகரங்களை இணைக்கிறது.

## தகவல்துளிகள்

- சென்னை உயர்நீதி மன்றத்தின் உள்ள நீதிபதிகள் எண்ணிக்கை -60.
- சென்னை உயர்நீதி மன்ற தலைமைநீதிபதி -வி.கே. தஹில்ரமணி
- தெலுங்கானா தேர்தலில் போட்டியிடும் திருநங்கை - சந்திரமுகி.
- சத்திஸ்கர் சட்டபேரவை தேர்தலில் 74.17% வாக்குபதிவு ஆனது.
- ஆசியாவின் முதல் டால்பின் ஆராய்ச்சி மையம் - பாட்னா (பீகார்).
- 2வது மெகா உணவு பூங்கா-மகாராஷ்டிராவிலுள்ள வாஹிகாவொன் மற்றும் தனகாவொன்.
- மத்திய உணவு பதப்படுத்துதல் தொழில்துறை அமைச்சர் ஹர்சிம் ரத் கவுர்.
- வருவாய் துறையின் புதிய செயலாளர் - அஜய் பூஷன் பாண்டே.

## முக்கியதினம்

### நவம்பர் 20:

- உலக குழந்தைகள் தினம்.
- இதை ஐநா சபை ஆண்டுதோறும் கொண்டாடுகிறது.
- **கருப்பொருள்:** "Children are Taking over and Turning the world blue".

## தமிழகம்

### இந்தியாவின் 57வது கிராண்ட் மாஸ்டர்:

- செர்பியாவின் நோவிசாட் நகரில் நடந்த சதுரங்கம் போட்டியில், தமிழ்நாட்டின் கார்த்திகேயன் பாண்டியன் முதலிடத்தை வென்று, இந்தியாவின் 57வது கிராண்ட் மாஸ்டராக உருவெடுத்துள்ளார்.

## விளையாட்டு

### 2018 ஹாங்காங் ஓபன் பேட்மிண்டன் போட்டி:

- இதில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் ஜப்பான் நாட்டு நசோமி ஒஹிரா வெற்றிபெற்றார்
- ஆண்கள் ஒற்றையர் பிரிவில் தென்கொரியாவின் சன்வான் ஹோ சாம்பியன் பட்டத்தை வென்றார்.